| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | பெரியசாமி | நாள் | 29.10.2021 |
| தகப்பனார் பெயர் | செங்கோட கவுண்டர் | | |

2 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 6ம் வகுப்புவரை படித்துள்ளேன். தாத்தா பெயர் சின்ன நாச்சியப்பக்கவுண்டர். பாட்டி பெயர் அத்தாயம்மாள். என்னுடைய தாத்தாவை நாச்சியப்பகவுண்டர் என அழைப்பார்களா என்றால் இல்லை. சின்ன நாச்சியப்பகவுண்டர் என தான் அழைப்பார்கள். நாச்சியப்பகவுண்டர் மனைவி அத்தாயம்மாள் என என்னிடம் காட்டப்படும் கணிணி பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கணிணிப்பட்டா பி.வா.சா.ஆ.3. வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் செங்கோடகவுண்டர் வாங்கிய கிரையப்பத்திரத்தை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எத்தனை சொத்துக்களுக்கு என்னுடைய தகப்பனார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 3 சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அத்தாயம்மாள் நிலம், குருவாயம்மாள் நிலம், இளையப்பனிடம் விலைக்கு வாங்கிய நிலம் ஆகிய சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். இளையப்பன் என்பவர் 2ம் பிரதிவாதியின் சித்தப்பா என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் வாங்கும்போது பொதுவில் 3ல் 1 பங்கு 2.20 என வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். வாங்கிய தேதியிலிருந்து என்னுடைய தகப்பனார் வழக்கு தாக்கல் செய்யும் வரை அளந்து பார்க்கவில்லை என்றால் ஆமாம். 2.20 தவிர மீதியுள்ள 4.40 2ம் பிரதிவாதி குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். அந்த 4.40ல் 2ம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் என்ன செய்தாலும் எனக்கு சம்மந்தமில்லை என்றால் ஆமாம். 2011 வரை அளந்து பார்க்காமல் 2.20 உள்ளது என என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கே தவறானது என்றால் சரியல்ல. பழைய சர்வே எண்.852 எனவும், அதன்பின்னர் 140 என்றால் ஆமாம். சர்வே எண்.140 என்பது தற்போது நிலையில் இல்லை எனவும், உட்பிரிவு ஆகிவிட்டது என்றாலும் ஆமாம். வழக்கு சொத்துவிபரத்தில் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் என கூறவில்லை என்றால் கூறியுள்ளார். வழக்குரையை காண்பித்து உட்பிரிவு கூறவில்லை என கேட்டதற்கு எனக்கு தெரியவில்லை என சாட்சியம்

அளிக்கிறார். என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்துவிபரமே தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை நான் அனுபவித்து வருகிறேன் என கூறுவதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் வாங்கிய 3 ல் 1 பங்கு 2.20 சொத்து எங்குள்ளது என தெரியாமலும், அதை எங்குள்ளது என கண்டுபிடிப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துவிட்டு, அதில் ஆணையாளரையும் நியமித்து அந்த 2.20 எங்களிடம் தான் உள்ளது என்பதை தெரிந்துகொள்ளவில்லை என்றால் மொத்தமாக 8.80 அளந்தார்கள். தனித்தனியாக அளக்கவில்லை. மூன்று சொத்துக்களையும் சேர்த்து அளக்கப்பட்டது எனவும், அதில் மொத்தம் 8.80 இருந்ததா என்றால் இருந்தது. அதில் மணி எந்த சொத்தையும் ஓட்டவில்லை என்றால் 2.20–யை ஓட்டி வருகிறார். அந்த 2.20 சொத்தின் சுவாதீனம் கொடுக்கவேண்டும் என என்னுடைய தகப்பனார் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 8.80 என்னுடைய தகப்பனாரிடம் இருப்பதாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் எனவும், நானும், மாதுவும், என்னுடைய தகப்பனாரும் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

5, 11 முதல் 13 பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.